©
GOVERNMENT OF TAMIL NADU
2001

Registered No.

# TIRUNELVELI DISTRICT GAZETTE

## EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No.10] TIRUNELVELI, MAY 15, 2001
Vaikasi 1, Visu, Thiruvalluvar Aandu-2032

## LOCAL AND MUNICIPAL NOTIFICATION

### Revised Water Supply Bylaws
### Tenkasi Municipality

(Lr.No.E1/9167/1999, 25-4-2001)

Bylaws framed under section 130, 131, 132,134, 135, 306, 308 and 309 of the Tamil Nadu District Municipalities Act. 1920 as amended relating to the Tenkasi Minicipal Water System revised and approved by the Municipal Council in its resolution No. 572, dated 7-12-2000 and finally approved and as confirmed by the Municipal Council in its resolution No. 677, dated 21-3-2001 and the Superintending Engineer, Office of the Commissioner of Municipal Administration, Chennai in his proceedings Roc. No. 87000/2000 - WS - 2, dated 2-3-2001are hereby published for information of the public and adoption.

The revised bylaws will come into force after three months from the date of its publication.

Bylaws framed under sections 130,131, 132, 134, 135, 306, 308 and 309 of Tamil Nadu District Municipalities Act V of 1920 as amended for water Supply Connections.

Every application for the supply of water under Section 131(1)(A), and 132 of the Tamil Nadu District Municipalities Act. 1920 shall be in writing duly signed by the owner of the building or by the tenant with the concurrenct letter by the owner in Form "A" with estimate and registration fee Rs. 100/-. The connections will be given on priority basis depending upon the date of Registration. The water supply connection work will be commenced only after remitting the deposit amount and estimate charges.

1) A centage fee of 15% of the estimated cost of work against supervision charges will be collected subject to the minimum of Rs. 750/- (Rupees Seven Hundred and Fifty Only).

2) In the case of supply to Government Buildings, the estsimated cost and supervision charges is not necessary to pay in advance.

3) a) The registration fee is not refundable under any circumstances.

b) Nevertheless to the water supply through the number of pipes laying for the domestic or non-domestic purpose. The supply of water shall be on meter system only and the charges will be collected for which purpose it was provided.

4) a) In house service connections for dwellings water would be drawn in any other purposes, the charges will be collected under non-domestic rate, without any free distribution supply.

b) Service connections to institutions owned, controlled and managed by the Municipal Council shall be on meter system and will be charged for which purpose it was provied.

c) No water connection will be given to those houses, which is not assessed to property tax.

d) In the case of a number of houses in the same compound such a police line, colony, Government qaurters etc, constructed by Government or any individual, a sum of Rs. 30/- per house will collected extra, along with water tax.

e) Water connection shall be given to those who live within the approval area, and limatation and plan which are approved by the Superintending Engineer, Office of the Commissioner of Minicipal Administration's Office, Chennai.

f) The service connection will be given for every house only through the individual pipe line, from the main water line and "Flow Contol Valve" will be fixed for control the supply. No any sub-connection should be given, from the service connection to any house which is under seperate assessment.

*EXPLANATION:-*

5) In the rule "House" means a part of a building or buildings or a building which the property tax was assessed and collected.

6) The supply of water to Mosque; Temples and Churches shall be only for drinking purpose.

a) A metered pipe line will be fixed at Mosque, Temples and Churches and same rules to the house connections will be applicable to Temples, Mosques and Churches too.

7) Subject to the those bylaws the diameter and the character of the service and communication pipes and the number size and kind of stop-cocks or taps shall in each case be determind of the Executive Authority having regard to the pressure available at the point of off-take at the main and distance of the premises to be served from the main. The service pipes of 15 mm and 20 mm will be used 10 mm and 15 mm ferrules respectively according to the distance. All taps in the house service shall be off screw down pattern of tested quality or any pipes approved by the superintending Engineer. The tap diameter need not be exceed 15 mm and it shall be ISI standard and as per the instruction of the Executive Authority.

8) If the straight distance of the water service connection exceeds 90 meters, the connection will be given only after approval of the Superindent Engineer office of the Commissioner of Municipal Administration's Office, Chennai.

9) a) All the taps, fittings, etc, for the house service connection shall be so fixed by the Executive Authority as to offered facility for easy inspection by municipal Autho rities. Every house owner or occupier shall offer all facilities for such easy inspection. The water supply will be cut off after due notice, where resistance is found.

(B) No tap of any service connection shall be allowed in such a position as to renter it liable to become submerged in water issuing from it, or in a position where the spill or waste water cannot be discharged by gravitation, to the nearest Municipal drain.

10. (A) Meters shall be supplies by the owner or occupier of the premises, after getting approved by the Executive Officer. The meter shall always be under the lock and seal of the officer and staff of the Municipality. The meter reading shall be taken once in a month.

(B) The owner or occupier shall pay Rs. 5/- per month for meter maintenance charges.

(C) : If the meter gets repair, the meter shall be rectified by the owner or occupier on their own expenses within 2 days after getting approved by the Executive Authority. The water connection will be disconnected, if the meter is not repaired immediately.

(D) : The water charges will be collected under sub-rule 16 of the bylaws during the meter repairing period,

11. The following deposit amount will be collected for water connection :

| | |
|---|---|
| 1. For domestic purpose.. | Rs. 6,000/- |
| 2. For commercial purpose .. | Rs. 12,000/- |
| 3. For industrial purpose.. | Rs. 12,000/- |

12. (A) : For house connection Rs. 4/- for every 1000 litres or part there of, subject to a minimum of Rs. 40/-(Rupees forty only) per month will be collected every month (applicable under rule 10 of water supply bylaws)

(B) : For use of non-domestic and industrial purpose Rs. 7.50 (Rupees seven and paise fifty) for every 1000 litres or part there of will be collected without free supply subject to a minimum of Rs. 75/- per month.

(C) : For use of non-domestic and commercial purposes Rs. 7.50 (Rupees seven and paise fifty) for every 1000 litres or part there of will be collected without free supply subject to a minimum of Rs. 75/- per month.

13. (A) : The water charges should be paid quarterly for the connections which are not connected meterly. The water charges will be paid before 10th of every beginning of the quarter. Failure to pay charges before 10th the water connection will be disconnected.

(B) The quarter period as follows :—

| | | |
|---|---|---|
| 1. January to March | ... | Ist quarter. |
| 2. April to June | ... | IInd quarter |
| 3. July to September | ... | IIIrd quarter |
| 4. October to December | ... | IVth quarter |

If the connection starts middle of the quarter the charges will be paid for full quarterly basis.

The water charges will be paid within 15 days from the receipt of the notice. The notice period covers usually previous quarter period (already water consumption period)

c) If the water charges not paid in time Rs.200/- (Rupess two hundred only) will be collected as disconnection charges and Rs. 200/- (Two hundred only) will be collected as re-connection charges. Totally Rs.400/- (Rupees Four hundred Only) will be collected.

14) No discount will be allowed for non-consumption of water for any payment of the quarterly period. The executive Authority can allow discount, if the non consumption of water for a fixed period of a full quarterly period or temporary disconnection requested under written application in advance by the consumer.

For temporary disconnection and re-connection Rs.200/- + Rs.200/- will be collected as disconnection charges and re-connection charges respectively.

15) a) If the owner or occupier find fault in meter conplaints can be made through application alongwith Rs.200/- deposit amount within 4 weeks from the date of finding defects in the meter.

b) The complaints made after the time limit mentioned above will not be considered.

c) In the investigation if the meter found fault or showing wrong calculation, the deposit amount will be refunded. In the investigation, if the meter work perfectly the deposit will be forfeited. 5% of error will be allowed on either side and ignored.

16) In the cases, where the meter is found to give in-correct readings or repair for any period exceeding one week the consumption recorded during the corresponding month or months of previous quarter or where this information is not available, the executive Authority will consider such available date which is most reasonable will be taken as basis for the charges and the quantity of the water as arrived at shall be deemed to be the quantity actually consumed. The Executive Authority decision is final in this matter.

17) No hand pump or motor pump shall be connected in the service connection. If the authority found the above, the service connection will be disconnected immediately without notice.

18) Except in the places mentioned in the subrule 23 and 24 domestic water connection should not be connected with water tank or sump for storing of water.

19) Every person to whom a house connection is or has been given by the Municipality shall maintain the house connection in good condition and repair at his cost.

20) During the inspection by the Executive Authority, he can empowered to order to disconnect the service connection. He can issue notice to the owner or occupier to rectify the water connection defects, if found, within a fixed period. If they failed to rectify the defects, the Executive

Authority can disconnect the water connection immediately to avoid water wastages contamination of water or he can repair the defects and collect the repairing charges from the owner or occupier.

During inspection if he found irregular connection or alternation in the water connection or extension of connection pipes he can issue 24 hours notice and disconnect the water service connection.

21) The water received from the domesticc water connection should not be used for other purposes or non-domestic purposes without prior approval obtained from the Executive Authority. If the Executive Authority find the water supplying by domestic connection used for other purposes, he can issue order to pay the non-domestic rate for the other suppty under sub-rule 12. If the owner or occupier fail to pay the water charges, the connection will be disconnected by the order by Executive Authority.

22) In the domestic water connection pipe line, no motor connection will be fixed for pumping of water. If the Executive Authority found the above, the disconnection will be effected apart from legal proceedings against the owner or occupier.

23) The water connection provided in private toilets, and urinals the water should be stored in the water tank as specified by the Executive Authority.

24) Every steam boiler which requires water from a Municipal pipe, supply, shall be supplied from a cistern and not directly from the service pipe and every such and cistern shall be supplied with a ball-valve, detective or warning pipe and proper means of access for inspection thereof.

25) Except in the case of fire, no persons not duly authorised by the Executive Authority in that he fals shall open or in any way interfere with any main pipe or valve or fire plug connected with Minicipal water supply.

26) The Commissioner can sanction temporary water connection for marriage and other functions. For each connection Rs.100/- per day or part there of for connection, and Rs.200/- for the connection from Main line, for disconnection Rs.200/- will be collected. The person who requires temporary connection will be supply all the pipes and other items of their own cost. For additional taps Rs.50/- per tap will be collected per day. The temporary connection will not be extended beyond 5 days.

27)a) No person shall break the seal or lock on the water or break the glass on the dial or open the meter or persent any meter duly registering the quatity of water supplied.

b) Obstrain or use water before it has been registered by a meter set-up for the purpose of measuring the same.

c) Permit or cause the meter to be stolen or damaged so that the meter may not duly register the quantity of water supplied.

28) a) A house service connections granted before these bylaws come into force shall be recognised as valid as through they had been granted under these bylaws and all outstanding charges for water supplied in respect of those connections and the cost of bringing those connections is confirmity with these bylaws shall be born by the owner of occupier of the premises concerned. If they fail to pay the amount the connection will be disconnected permanently.

b) The by laws on the subject hither to inforce shall cease to operate from the date of coming into force of these by-laws.

29) The council reserves to itself the right to cut-off after giving 24 hours notice any supply granted for domestic or non-domestic purposes, if in its opinion there is any scarcity of water at the source. In such cases, the council shall not be liable for damages.

30) These bylaws shall be applicable to such institution owned, controlled and managed by Government as may be determined by the Superintending Engineer, Office of the Commissioner of Municipal Administration, Chennai on the merits of each case.

31) Who ever commits a break of any of the above bylaws shall be punishable.

a) With fine which may extend Rs.2500/- (Rupess two thousand five hundred only) and in each of continuing break with fine which may extend to Rs.25/- (Rupees twenty five only) for every-day during which the break contineous after conviction of the first break. If the break contineous the service connection will be disconnected and legal action will also be taken.

32) For New water connection, application can be obtain from Municipal Office after paying Rs.10/- (Rupees ten only) at the counter and get the Form "A"

A. BALASUBRAMANIAN,
Municipal
Commissioner.

Tenkasi,
17th April 2001.

PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING AT THE GOVERNMENT BRANCH PRESS, PUDUKKOTTAI AND PUBLISHED BY THE COLLECTOR OF THE DISTRICT.

©
தமிழ்நாடு அரசு
2001

நகராட்சி அலுவலகம்
2 8 . . 2001
தென்காசி

பதிவெண்

# திருநெல்வேலி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருநெல்வேலி, மே 15, 2001 | எண் 24

வைகாசி 1, விக, திருவள்ளுவர் ஆண்டு—2032

### உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

### திருத்தப்பட்ட குடிநீர் விநியோக துணை விதிகள் தென்காசி நகராட்சி,

**(இ1/9167/99, 25—4—2001)**

1920ம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 130, 131, 132, 134, 135, 306, 308 மற்றும் 309 பிரிவுகளின்படி தென்காசி நகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகளை திருத்தம் செய்து செயல்படுத்த தென்காசி நகர்மன்றத்தின் 7-12-2000ம் தேதிய 572ம் எண் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் 2-3-2001ம் தேதிய 87000/2000 குவ. 2, செயல்முறையில் இறுதி ஒப்புதல் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட துணை விதிகளை தென்காசி நகர்மன்றம் தனது 21-3-2001ம் தேதிய 677ம் எண் தீர்மானத்தில் உறுதி செய்துள்ளதின்படி இதன்மூலம் பொது மக்கள் பார்வைக்கு அறிக்கை செய்யப்படுவதுடன் இவ்வறிக்கை விளம்பரப்படுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குப்பின் நடைமுறைப்படுத்தவும் பிரசுரிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை பிரசுரமான தேதியில் இருந்து மூன்று மாத காலம் முடிந்தவுடன் நடைமுறைக்கு வரும் எனவும் இதனால் அறிவிக்கப்படுகிறது.

**குடிநீர் விநியோக துணை விதிகள் :**

தென்காசி நகராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்காகவும், அதனை முறைப்படுத்துவதற்காகவும் திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்டத்தின் 130, 131, 132, 134, 135, 306, 308 மற்றும் 309 பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்.

குடிநீர் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்துணை விதிகள் 131ன்(1) ஆவது பகுதி (அ), 132வது விதிகள் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து, பதிவுக் கட்டணம் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்பவேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத்தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்திரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவக்கப்பட வேண்டும்.

1) மேற்பார்வை முதலிய காரணங்களுக்காக வேலைக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 15 % "சென்டேஜ் கட்டணமாக வசூலிக்கப்படும்" குறைந்த அளவு கட்டணம் ரூ.750/- வசூலிக்கப்படும்.

2) அரசினர் கட்டிடங்களுக்காக குழாய் இணைப்பு வேலைக்குறிய செலவு மதிப்பீட்டுத் தொகையும் அதற்குரிய மேற்பார்வைக் கட்டணமும் நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முன்னதாக செலுத்த வேண்டிய அவசியமில்லை.

3)அ) மேற்சொன்ன பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பத் தரப்படமாட்டாது.

ஆ) குடும்பப் பயன்களுக்காகவோ அல்லது அவையில்லாத பிற பயன்களுக்காகவோ வழங்கப்படும் குடிநீர் இந்த இணைப்பின் வாயிலாக அமைக்கப்படும் குழாய்களின் எண்ணிக்கை எத்தகையதாய் இருப்பினும் அளவுமானி கட்டண முறையில் மட்டுமே அனுமதிக்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் எந்தப் பயன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதோ அவற்றிற்கான விதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4. அ. ஒரே இணைப்பில் பொயிலாக குடும்ப பயன்களுக்கும், அவையில்லாத பிற பயன்களுக்கும் சேர்த்து எடுக்கப்படும் குடிநீருக்கு "இலவச வழங்கல் அளவு" ஏதுமின்றி குடும்பப் பயன்கள் அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்கு உரிய விதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆ. நகராட்சி மன்றத்தில் உரிமை ஆணைக்குட்பட்டு நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்குள் கொடுக்கப்படும் பயன் இணைப்புகளும் கூட அளவு மானி கட்டணமுறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடி நீருக்கான காரியங்களைப் பொறுத்து குடும்ப பயன் அல்லது அவையற்றபிற பயன்களுக்கான விதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ. சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட மாட்டாது.

ஈ. ஒரே கட்டுக்கோப்புக்குள் கட்டப்பட்டிருக்கும் பல வீடுகளுக்கும் அதாவது அரசினராகவோ அல்லது தனிப்பட்ட நபரினாலோ கட்டப்பட்ட பல கட்டிடங்கள் கொண்ட விடுதிகளிலுள்ள வீடுகள் ஒவ்வொன்றிற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 30/- வீதம் கட்டணத்தொகையுடன் கூடுதலாக விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

உ. கண்காணிப்புப் பொறியாளர் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம் அவர்களின் அங்கீகாரத்துடனும், மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடனும் நகராட்சி மன்றம் தனது நகராட்சி எல்லைக்குள் யாதொரு நபருக்கும் குடிநீர் வழங்கலாம்.

5. குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பெருங்குழாயில் இருந்து "ஒரே ஒரு குழாய் இணைப்பு மட்டுமே கொடுக்கப்படும்". அத்தகைய இணைப்பை கட்டுப்படுத்த பெருல் " Flow control Value" ஆகியவற்றால் முறைப்படுத்தப்படும். எந்த வீட்டிற்கும் வேறு வரிவிதிப்பின் கீழ் வரும் அண்மையில் உள்ள வீட்டிலிருந்தோ அல்லது கட்டிடங்களிலிருந்தோ தற்போது அல்லது இனிமேல் கொடுக்கப்பட்டுவிருக்கும் பயன் இணைப்பில் இருந்து தண்ணீர் வழங்கப் படுதல் கூடாது.

**விளக்கவுரை :**

" இத்துணை விதிகளில் இடம் பெறும் "வீடு" எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

(6) மசூதிகள், கோயில்கள், மாதாகோயில்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே ஆகும்.

அ. பெரியகோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் பொருத்தமட்டில் நீர் வழங்கும் விதம் தக்க வகையில் கட்டுப்படுத்தப்பட்ட அளவு மானியுடன் குழாய் ஒன்று அனுமதிக்கப்படும். வீட்டு உபயோகங்களுக்காக கொடுக்கப்படும் இணைப்பு விதிகள் கோயில்கள், மசூதிகள், மற்றும் மாதாகோயில்களுக்கான இணைப்புகளுக்கும் பொருந்தும்.

(7) இத்துணை விதிகளுக்கு உட்பட்டு பெருங்குழாயில் நீர் ஈர்ப்பு முனையில் உள்ள ஆழத்தையும் பெருங்குழாயிலிருந்து வீட்டுக்குழாய் அமைந்துள்ள தொலைவையும் பொறுத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்தரும் குழாய்களை தொடர்பு குழாய்கள் ஆகியவற்றின் விட்டமும், தன்மையும் தடுப்பான்கள் அல்லது குழாய்களின் அளவு வகை ஆகியவை நிர்வாக அதிகாரியால் முடிவு செய்யப்படவேண்டும். பொருத்தப்பட்ட, படவேண்டிய திருகு குறுங்குழாயின் நிர்ணய அளவுகள் கீழ்கண்டவாறு அமைக்கப்படவேண்டும். 15 மி.மீ பயன்தரும் குழாய் 10 மி.மீ திருகு குறும் குழாய், 20 மி.மீ பயன்தரும் குழாய் 15 மி.மீ திருகு குறும் குழாய் குடும்ப பயன்களுக்காக எல்லாக், குடிநீர் குழாய்களும் கீழ்திருகும் வகையைச் சார்ந்ததாகவோ அல்லது நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தின் கண் காணிப்புப் பொறியாளரின் ஒப்புதல் பெற்ற ஏதேனும் ஓர் வகையைச் சார்ந்ததாகவோ இருத்தல் வேண்டும். மேற்படி குழாயின் அளவு 15 மி.மீ. விட்டத்திற்கு மேற்படக் கூடாது குடிநீர் நுகர்வோரின் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை நிர்வாக அதிகாரி குறிப்பிடும்படி இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக் குறிப்பிற்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர் மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாயிருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே அளிக்கப்படவேண்டும்.

9) அ) வீடுகளுக்கு கொடுக்கப்படும் இணைப்பை சேர்ந்த குழாய்கள் இணைப்புகள் முதலியன நகராட்சி அதிகாரிகளால் அல்லது ஊழியர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக இருக்கத்தக்க வகையில் பொருத்தப்பட வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் ஒவ்வொருவரும் அவ்வாறு அதிகாரிகள் பார்வையிடுவதற்கு முனைவதோடு எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும். அவ்வாறின்றி எங்கே பார்வையிடுவதற்கு தடை ஏற்படுகிறதோ அவ்விடத்தின் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் குழாய் நீரில் மூழ்கிவிடும் வகையில் அமைப்பபட்டிருக்கக்கூடாது. அல்லது அக்குழாயில் இருந்து சிதறும் நீர் அல்லது கழிவு நீர் அண்மையில் உள்ள நகராட்சி சாக்கடை அல்லது வடிகால் அமைப்புக்கு சரிந்து ஓடும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10) அ) அளவுமானிகள் நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு வீடுகளில் உரிமையாளரால் அல்லது குடியிருப்பவர்களால் வழங்கப்படவேண்டும். எனினும் அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அதிகாரிகள் அல்லது ஊழியர்களால் பூட்டிவைக்கப்பட வேண்டும். அல்லது அவர்கள் மூடி முத்திரையிட்டு வைக்கப்பட வேண்டும். மேலும் இந்த அளவு மானிகள் பொதுவாக திங்களுக்கு ஒருமுறை அளவு எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

ஆ) அளவுமானி வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பவரால் வழங்கப்பட்டிருந்தால் அளவுமானி ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.5.00 வீதம் அளவுமானிகள் பராமரிப்புக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும்.

10. இ) வீடுகளில் உரிமையாளரால் அல்லது குடியிருப்பவரால் வழங்கப்படும் அளவுமானி பழுதடைந்து விட்டால் அவர் நிர்வாக அதிகாரியின் ஆணைகள் கிடைக்கப்பெற்ற இரண்டு தினங்களுக்குள் அந்த அளவுமானி நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தமது சொந்த செலவில் பழுது பார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தவறினால் குழாய் இணைப்பை துண்டித்து விடலாம்.

ஈ) அளவுமானி இயங்காது மேற்கண்ட காலங்களில் வழங்கப்படும் நீருக்கான கட்டணம் 16வது துணை வரையறுத்துள்ள வீதப்படி கட்டணம் விதிக்கப்பட வேண்டும்.

11) நகராட்சி மூலம் வழங்கப்படும்குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு வைப்புத் தொகைகள் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| அ. வீட்டு உபயோகத்திற்கு | ரூ.6000/- |
| ஆ. வீட்டு உபயோகமில்லாத வியாபாரநிறுவனங்கள் | ரூ.12,000/- |
| இ. வீட்டு உபயோகமில்லாத தொழிற்சாலை நிறுவனங்கள் | ரூ. 12,000/- |

12. அ). அளவுமானி கட்டணமுறையின் கீழ் வீட்டு பயன்களுக்கான இணைப்புகளுக்கு குடிநீர் 1000 லிட்டருக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 4/- ( ரூபாய் நான்கு மட்டும்) என்ற வீதத்தில் குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 40/- ( ரூபாய் நாற்பது மட்டும்) வசூலிக்கப்படும். இந்த இணைப்புகளுக்கு அளவுமானி அமைத்தல் மற்றும் பராமரித்தல் விதி 10 - ல் சொல்லப்பட்டுள்ளவை இவ்விடத்திலும் பொருந்தும்.

ஆ. குடும்ப பயன்களுக்கு அல்லாத தொழிற்சாலை நிறுவனங்களுக்கு குடிநீர் வழங்குமிடத்து 1000 லிட்டருக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.7.50 (ரூபாய் ஏழு பைசா ஐம்பது) என்ற விதத்தில் இலவச வரையறை ஏதுமின்றி குறைந்தபட்சம் மாதம் ரூ. 75/- ( ரூபாய் எழுபந்தைந்து மட்டும்) வசூலிக்கப்படும்.

இ- வீட்டு உபயோகமில்லாத வியாபார பயன்களுக்காக குடிநீர் 1000 லிட்டருக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 7.50 ( ரூபாய் ஏழு பைசா ஐம்பது மட்டும்) விதத்தில் இலவச வரைறை ஏதுமின்றி குறைந்த பட்சம் மாதம் ரூ. 75/- ( ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) வசூலிக்கப்படும்.

13. அ). அளவுமானி கட்டணமுறை கீழ் இல்லாத இணைப்புகளுக்கு கட்டணங்கள் காலாண்டுக்கு ஒரு முறை செலுத்த வேண்டும். காலாண்டு துவக்கத்திலேயே 10- ம் தேதிக்குள் செலுத்தவேண்டும். தவறினால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ). காலாண்டு என்பது கீழக்கண்டவாறு அமையும்

1. ஜனவரி முதல் மார்ச் வரை முதல் காலாண்டு.

2. ஏப்ரல் முதல் ஜூன் வரை இரண்டாம் காலாண்டு.

3. ஜூலை முதல் செப்டம்பர் வரை மூன்றாம் காலாண்டு.

4. அக்டோபர் முதல் டிசம்பர் வரை நான்காம் காலாண்டு.

இதில் பகுதி மாதமாக இருப்பினும் முழு காலாண்டுக்கும் குடிநீர் கட்டணம் செலுத்த வேண்டும்

அளவுமானி கட்டணமுறையின் கீழ் செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு அனுப்பிய 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு திங்களும் [illegible] தேதிக்குள் அனுப்பப்பட வேண்டிய இந்த [illegible] அதற்குமுந்திய திங்களில் பயன்படுத்தப்பட்ட [illegible] றியதாகும்.

இ) குடிநீர் கட்டணம் செலுத்தப்படாமை காரணமாக துண்டிக்கப்பட்ட குழாய் இணைப்புகளுக்கு துண்டிப்பு கட்டணம் ரூ. 200/- (ரூபாய் இருநூறு மட்டும்) மற்றும் மறு இணைப்பு கட்டணம் ரூ. 200/- (ரூபாய் இருநூறு மட்டும்) ஆக மொத்தம் 400/ ( ரூபாய் நானூறு மட்டும்) வசூலிக்கப்படும்.

14) குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டு பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. தண்ணீர் பயன்படுத்தாமல் இருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் நிர்வாக அதிகாரி கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமை குறித்து முன்னதாக தகவல் அறிவிக்கப்பட்டு அந்த இணைப்பை தற்காலிகமாக மூடிவிடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதையடுத்து கட்டணத்தள்ளுபடி குறித்தும் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு இணைப்பு துண்டிக்கப்படும் போது துண்டிப்புக் கட்டணம் ரூ. 200/- ம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் மறுஇணைப்பு கொடுக்க ரூ. 200/ (ரூபாய் இருநூறு மட்டும்) கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

15. (அ) அளவுமானிகளின் தவறான கணக்கெடுப்புகள் அல்லது அளவுமானிகளில் எழும் பிற குறைபாடுகள் பற்றிய புகார்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சனைக்கு உரிய தவறான கணக்கீடு அளவுமானிகளில் கவனிக்கப்பட்ட நாளில் இருந்து நான்கு வாரங்களுக்கு ரூ. 200/- ( ரூபாய் இருநூறு மட்டும்) வைப்பீட்டுத் தொகையுடன் மனு செய்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) மேற்சொன்ன காலவரையறைக்குள் செய்து கொள்ளப்படாத புகார்களும் குறிப்பிட்ட வைப்பு தொகையுடன் அனுப்பப்படாத புகார்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) அளவுமானி தவறான கணக்கீட்டைக்காண்பித்தாலோ அல்லது பிறவகை குறைபாடுகளை உடையது என்றோ பரிசீலனையில் தெரியவந்தால் வைப்பீட்டுத் தொகை திரும்பக்கொடுக்கப்படும். அப்படியின்றி அளவுமானி சரியான கணக்கீட்டை காண்பிக்கிறது என்று தெரியவந்தால் வைப்பீட்டுத் தொகை பறிமுதல் செய்யப்படும். நிர்வாகத்தின் மற்றும் அளவுமானி பயன்படுத்துவோரின் ஆகிய இரு தரப்பினரின் சார்பிலும் 5 சதவீதம் வரையில் உள்ள தவறு புறக்கணிக்கப்படும்.

16) அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது ஒருவார காலத்திற்கு மேலாக அளவுமானி பழுதான நிலையில் இருந்தாலும் முந்தைய ஆண்டின் இதே காலாண்டு அல்லது அந்த காலாண்டில் பயன்படுத்தப்பட்ட நீரின் அளவிற்கான

பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் நிர்வாக அதிகாரி மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்கள் பிரச்சனைக்குரிய மேற்கண்ட காலத்தில் கட்டணங்கள் விதிப்பதற்கான அடிப்படையாகக் கொள்ளப்படும். அவ்வாறு கணிக்கப்பட்ட நீரின் அளவு அக்கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீரின் அளவாகக் கருதப்படவேண்டும். இது குறித்து நிர்வாக அதிகாரியின் முடிவே இறுதியானதாகும்.

17) வீட்டின் இணைப்புகளில் பயன் குழாயில் யாதொரு கைவிசை கருவியையும் நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றும் கருவி ஆகியவைகளைப் பொருத்த அனுமதிக்கப்பட மாட்டாது. பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித அறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

18) பின்வரும் துணை விதி 23 மற்றும் 24 ஆகியவைகளில் குறிப்பிட்டுள்ள இடங்கள் தவிர மற்ற வீட்டு இணைப்பு குழாய்கள் எவையும் நீரை சேமித்து வைக்கப்படுவதற்காக வேண்டி எந்தவிதமான தொட்டியுடனும் இணைக்கப்பட அல்லது பொருத்தப்படக் கூடாது.

19) நகர் மன்றத்தினால் வீட்டுக்கு இணைப்புக் கொடுக்கப்பெற்ற ஒவ்வொருவரும் அதனை நல்ல முறையில் பேணி வருவதுடன் பழுதற்ற போது அதை தமது செலவில் பழுது பார்த்துக் கொள்ள வேண்டும்.

20) வீட்டுக் குழாய் இணைப்பின் நிலையை பரிசீலிக்கும் பொருட்டு வீட்டுக்குழாய் இணைப்பிற்கு தொடர்பாக ஒரு குழாய் அல்லது இணைப்பை எந்த சந்தர்ப்பத்திலும் நிர்வாக அதிகாரி அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும் போதோ அல்லது வேறு விதத்திலோ குழாய்கள் அல்லது இணைப்பு ஏதோ ஒரு வகையில் பழுதுற்றிருப்பதாக அறியப்பட்டால் நிர்வாக அதிகாரி வீட்டின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பவருக்கு குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள் பழுதினை நீக்க அல்லது குழாய்களை சரி செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறிவிப்பு ஒன்று கொடுக்க வேண்டும். அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் பழுது அகற்றும் வேலை நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது அப்பழுதின் காரணமாக நீர் விரையாகும் என்றும், அல்லது நீரின் தூய்மை கெட்டுவிடக்கூடம் என்றும் நிர்வாக அதிகாரி உணர்ந்தால், அத்தகைய பழுது அகற்றும் வேலையை தாமாகவே நிறைவேற்றி அதற்கான செலவினை அந்த இணைப்பின் உரிமையாளரிடமிருந்தோ குடியிருப்பாளரிடம் இருந்தோ வசூலிக்கலாம். அல்லது இணைப்பு துண்டித்து அந்த வீட்டு இணைப்புக்கு நீர் வழங்குவதை நிறுத்திவிடலாம்.

மேலும் இத்தகைய பரிசீலனையின்போது ஒப்புதல் பெறாத குழாய் சேர்க்கைகள் மாற்றங்கள் அல்லது நீட்டிப்புகள் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருமாயின் செயல் அதிகாரி மேற்கண்ட தவறுக்குறிய வீட்டிணைப்பின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு 24 மணி நேர அறிவிப்பு கொடுத்துவிட்டு வீட்டுக்குழாய் நீர்வழங்கும் இணைப்பையும் துண்டித்துவிடலாம்.

21) குடும்பப் பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக்குழாய் இணைப்பில் இருந்து கிடைக்கும் குடிநீரை நிர்வாக அதிகாரி எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்களில்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்தக் கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டில் குடியிருப்பாளர் குடும்பப் பயன்களுக்கான குடிநீரை அவைகள் அல்லாத பிறவற்றுக்கு பயன்படுத்துவதாக நிர்வாக அதிகாரி அறியவரினும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும் அவர்தான் அறிவிக்கும் தேதியில் இருந்து துணை விதி 12-ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப பயனகளுக்கு அல்லாத விதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரிய வரை தன்னுடைய ஆதாரம் புள்ளி விபரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர் குடியிருப்பாளர் செலுத்தத்தவறினால் அந்த வீட்டிணைப்பைத் துண்டித்து விட நிர்வாக அதிகாரி உத்திரவிடலாம்.

22. நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் குழாயில் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாயை அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரிய குழாயிலிருந்து குடிநீர் பார்க்கக்கூடாது. அவ்வாறு பார்ப்பது கண்டு பிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

23) நகராட்சி குடிநீர் திட்டத்தில் இருந்து நீர் வழங்கப்பெறும் தனியார் கழிவிடம் சிறுநீர் போக்கிடம் ஆகியவைகள் நிர்வாக அதிகாரியால் முடிவு செய்யப்படும் அளவில் மற்றும் தன்மையில் அவரால் குறிக்கப்படும் இடத்தில் அமைக்கப்பட்ட தொட்டி ஒன்றுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

24) நகராட்சி குழாயில் இருந்து தண்ணீர் வேண்டுகின்ற நீராவி கொதிகலம் ஒவ்வொன்றுக்கும் நீர்த் தொட்டி ஒன்றில் இருந்து நீர் வழங்கப்படுமேயன்றி பயன் வழங்கு குழாயில் இருந்து நேரடியாக வழங்கப்படமாட்டாது. அத்தகைய ஒவ்வொரு நீர்தொட்டியிலும் பந்து அடைப்பான் ஒன்றும் எச்சரிக்கை குழாய் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். மேலும், அதனை பார்வையிடுவதற்கு தக்கவாறு நுழைவு அமைந்திருக்க வேண்டும்.

25) தீ விபத்து நேரிடும் போதன்றி பிற சந்தர்ப்பங்களில் நிர்வாக அதிகாரியிடம் முறையாக அதிகாரம் பெறாத எவரும் நகராட்சி மன்ற குடிநீர் வழங்கும் திட்டத்தின் நீர் பிரதான குழாய் அல்லது பகிர்மான குழாய்கள் அல்லது தடுக்கிதழ்கள் அல்லது தீயணைக்கும் நீராவிப் பாய் ஆகியவற்றிற்கு எவ்விதத்திலும் திறக்கக்கூடாது அல்லது இவற்றின் போக்கில் தலையிடுதல் கூடாது.

26) ஆணையாளர் அவர்கள் உத்திரவின் பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100.00 பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.200.00 ம் அதை திரும்பத் துண்டிக்கும் போது ரூ.200.00ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிமாக இணைப்பு கொடுக்கப்படும் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், செலவிலும் செய்து கொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50.00 வீதம் வசூலிக்கப்படும். மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக் கூடாது.

27) அ) அளவுமானியின் மீது உள்ள முத்திரையை அல்லது பூட்டை எவரும் உடைக்கக்கூடாது. அல்லது குறிப்பெண்கள் உள்ள முகப்பில் கண்ணாடியை உடைக்கக்கூடாது. அல்லது அளவுமானியினை திறக்கக்கூடாது அல்லது அளவுமானி ஒன்றின் குறிப்பின் பகுதியை மாற்றக்கூடாது. அல்லது வழங்கும் குடிநீரின் அளவை முறையாகப் பதிவுசெய்வதில் தடை உண்டாக்கக்கூடாது.

ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும்முறையை தவிர்க்கவேண்டும்.

இ) வழங்கப்படும் குடிநீரின் அளவை அளவுமானி பதிவு செய்யாமல் இருக்கும் பொருட்டு அளவுமானியைக் களவாடி செல்லப்படுவதையோ அல்லது அளவுமானிக்கு சேதம் விளைவிக்கப்படுவதையோ அனுமதிக்கக்கூடாது. அல்லது அதற்கு காரணமாகவும் இருக்கக்கூடாது.

28) அ). இந்தத் துணைவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன் வழங்கப்பட்டு அவற்றிற்கான எல்லா கட்டணங்களும் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் அவைகளை இத்துணைவிதிகளுக்கு உடன்பாடுகள் வகையில் வீட்டிணைப்புகளை பயனுக்குக் கொண்டு வருவதற்கான முழுத்தொகையையும் வீடுகளின் உரிமையாளர்/ குடியிருப்போர் ஏற்றால் தான் வீட்டிணைப்புகள் அதிகார பூர்வமாகச் செல்லத்தக்கதாக ஒப்புக் கொள்ளப்படும். தொகை செலுத்தத்தவறும் பட்சத்தில் குடிநீர் இணைப்பு நிரந்தரமாய் துண்டிக்கப்படும்.

ஆ) இதுவன்றி நடைமுறையில் இருந்துவந்த இப்பொருள் பற்றிய செயல்முறைகள் இத்துணை விதிகள் நடைமுறையில் இயங்க துவங்கிய நாளில் இருந்து நிறுத்தப்படும்.

29. நீர்வழங்கும் மூலாதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாகவோ அல்லது குடும்பப் பயன்களுக்கான அல்லது அவையல்லாத பிற பயன்களுக்காக வழங்கப்படும் குடிநீர் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்றோ அல்லது குழாய் இணைப்புகள் எவையேனும் வேண்டுமென்றே பழுது ஆக்கப்படுகிறது என்றோ நகராட்சி மன்றத்தில் நோக்கு தெரியவரின் மேற்படி குழாய் இணைப்பை அறவே எச்சரிக்கை அறிவிப்பு அனுப்பிய 24 மணி நேர அவகாசத்திற்குப் பின்னர் துண்டித்துவிடும் உரிமையை நகராட்சி ஆணையர் தன்னகத்தே ஒதுக்கிக் கொண்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பிற்கும் நகராட்சி மன்றமோ அல்லது நிர்வாக அதிகாரியோ பொறுப்பேற்கத் தேவையில்லை.

30. ஒவ்வொரு இணைப்பின் நடைமுறைப்படி நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தில் கண்காணிப்பு பொறியாளர் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையானவை ஆணைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

31. மேற்காணும் துணைவிதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் எவரும் கீழ்க்கண்ட வாறு தண்டனைக்கு உரியவராவார்.

அ) பொதுவாக ரூ. 2500/- வரையிலான அபராதம் விதிக்கப்படும். முதலில் செய்யப்பட்ட குற்றத்திற்குரிய தீர்ப்புக் கூறப்பட்ட பின்பும் தொடர்ந்து செயல் படும் ஒவ்வொரு குற்றத்திற்கும் அவை தொடர்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ரூ.25/- (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) வரையிலான அபராதம் விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32. குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை (படிவம். அ) ரூபாய்.10/- நகராட்சி கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

/அ.பாலசுப்பிரமணியன்/
நகராட்சி ஆணையர்.

தென்காசி
14.4.2001

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.